

# வேரும் தளிரும்

யாதும் ஊரே யாவரும் கேளிர்



விண்ணெட்டும் பாரம்பரியம்

விண்ணெட்டிய விஞ்ஞானம்

பிலவ ஆண்டு, ஐப்பசி 01, கலியுகம் 5119 வளர்பிறை திரயோதசி (18-10-2021), பூரட்டாதி ,

## தூய்மை பாரதத்திற்கான தூய்மை பணியாற்றியவர்

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் அறுபதினாயிரம் குழந்தைகள் ஐந்து வயதுக்கு உட்பட்டவர்கள் நீரினால் பரவும் வியாதிகளால் மரணிக்கின்றனர் என்று புள்ளி விவரம் கூறுகிறது. இதற்குக் காரணம் முறையான சுகாதார பழக்க வழக்கங்கள் இல்லாமல் இருப்பதே என்பதை பொதுவாக யாவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

உலகின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவரான பில்கேட் 200 மில்லியன் டாலர்களை கழிப்பறை வடிவமைப்பு மேம்பாட்டுக்காக ஒதுக்கியிருக்கிறார் என்பதை அறியும் போது பிரச்சனை எவ்வளவு பெரியது என்பது புரிகிறது.

பாரதப்பிரதமர் 2014 சுதந்திர தின உரையில் தூய்மை இந்தியா திட்டத்தை அறிவித்தபோது முக்கியமாக குறிப்பிட்டது "நம் தாய்மார்களுக்கும் சகோதரிகளுக்கும் திறந்தவெளி கழிப்பிடத்தை தேடிச் செல்லவேண்டிய அவமானத்தை துடைக்கும் வகையில் சுகாதாரமான கௌரவமான மறைவு கழிப்பறைகளைக் கட்டித்தரவேண்டும்" என்றார்.

அவர் இந்த திட்டத்தை அறிவிப்பதற்கு இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன்பே ஒரு தமிழ்நாட்டுத் தொண்டு நிறுவனம் அதற்காக பாடுபட்டுக் கொண்டிருந்தது. திருச்சிராப்பள்ளியை சேர்ந்த SCOPE (Society for Community Organization and People's Education) என்கிற அந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆரம்பகாலங்களில் மகளிர் சுயவேலை வாய்ப்பிற்கான திட்டங்களில் கவனம் செலுத்தியது. அப்போது முக்கியமாக தெரிய வந்தது கணிசமான அளவு மருத்துவ செலவுகளை குடும்பங்களில் சுகாதார முறைகளை கையாண்டாலே தவிர்க்கலாம் என்பதே, இதன் தலைமை பொறுப்பில் வழி காட்டி நடத்தியவர் திரு மராச்சி சுப்புராமன்.

இந்நிலையில் Central Rural Sanitation Programme (CRSP) திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்திய போது திரு சுப்பராமன் மாவட்ட அதிகாரிகளுடன் கலந்து பரவலாக பல கிராமங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக கழிப்பறைகளை கட்டுவதற்கு பதிலாக ஒரே கிராமத்தை தத்து எடுத்து அனைத்து வீடுகளுக்கும் கட்டித் தருவதன் மூலம் ஒரு மாதிரி கிராமத்தை உருவாக்கலாம் என்று பரிந்துரைத்தார், அவர் யோசனையை ஏற்றுக் கொண்டு தேவபுரம் என்னும் கிராமத்தில் 1990 -ல் திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் திரு சுப்பராமனுக்கு கழிப்பறைகள் வடிவமைப்பதில் உள்ள செயல்பாடுகள், மக்களின் பணவசதி, அவர்களின் மனத்தடைகளை எதிர்கொள்ளல் போன்ற நுணுக்கமான விவரங்கள் அத்துபடியாயிற்று. நிர்மல் பாரத் அபியான் என்னும் திட்டத்தில் ஆலோசகராக அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

சாதாரணமாக தனி வீடுகளில் அமைக்கப்பெறும் கழிவறைகளில் செப்டிக் டாங்க் முறைப்படி, பயன்பாட்டுக்குப் பின் வெளியாகும் அதிகப்படி நீரை சுற்றியுள்ள மண் உறிஞ்சிக் கொள்ளும்படி வடிவமைத்திருப்பார்கள். ஒரு நிலையில் இந்த நீர் நிலத்தடி கிணற்று நீருடன் கலந்து அதை மாசுபடுத்தும் அபாயம் ஏற்படுகிறது. இதற்கு ஆகும் செலவும் மிக அதிகம்.

மேலும் செப்டிக்-டாங்க் முறை நிலத்தடி நீர் மிக அதிகமாக இருக்கும் ஆற்றுப்படுகைகளிலும் மழைப் பிரதேசங்கள் கடலோர பிரதேசங்களில் மண்ணின் உறிஞ்சும் தன்மை குறைந்து போவதால் முறைப்படி செயல்படாமல் பயனற்று போகின்றன. இப்பிரச்சனை 2006 -ல் முசிறியில் எழுந்தது. அப்போது திரு சுப்பராமன் Dry Latrine முறைகளை ஆராய்ந்தார்.



ஸ்வீடன் நாட்டு "உனோ வின்பால்ட்" என்பவரின் ECOSAN கழிப்பறை வடிவமைப்பில் சில மாற்றங்களை செய்து EUDT (Ecosan Urine Diversion Toilet) என்ற பெயரில் நம் நாட்டின் பழக்க வழக்கங்களை அனுசரித்து சுப்புராமன் வடிவமைத்தார். இவை முற்றிலுமாக உலர் கழிவறை (Dry Latrines) வகையானதால் மேற்கண்ட குறைகளை முழுவதுமாக போக்குகிறது. அது மட்டுமல்லாது நீரில்லாத வறண்ட பிரதேசங்களுக்கும் இது ஒரு சிறப்பான வடிவமைப்பாகும்.

இந்த காரணங்களால் இந்திய அரசு அதிக அளவில் இக்கழிப்பறைகளை கட்டுவதற்கு முன்வந்தது. இது வரையில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் EUDT என்னும் உலர் கழிவறைகளை இந்தியாவின் பல மாகாணங்களில் நிர்மாணித்துள்ளார். இக்கழிவறைகளின் சிறப்பு அம்சம் மிக மிக குறைந்த அளவே நீரை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதும் மக்கப்பட்ட கழிவுகள் மிகத் தரமான இயற்கை உரமாக மாற்றப்படுவதும் ஆகும்..

இது தூய்மை இந்தியா கனவை மெய்ப்படுத்துவதில் ஒரு மைல் கல்லாகும். இந்த சாதனைக்காக திரு சுப்பராமனுக்கு பத்மஸ்ரீ விருதை 2021 குடியரசு தினத்தன்று இந்திய அரசாங்கம் அறிவித்து கௌரவித்தது.

**உலக 'கழிப்பறை தினம்'** பற்றி உங்களுக்கு தெரியுமா?. (https://www.worldtoiletday.info/learn-2021 )

## *தெரிந்த ஊர், தெரியாத விஷயம் : நவராத்திரி பொம்மைகள் தயாரித்தல்*

மனிதர்களின் கற்பனைக்கு வடிவம் தருவதே ஓவிய மற்றும் சிற்பக் கலைகள். அதில் பொம்மை தயாரித்தல் என்பது சிற்பக்கலையின் ஒரு கூறு. நன்கு பதப்படுத்தப்பட்ட களிமண்ணில் பொம்மை தயாரித்தல் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. புராணக் கதைகளையும், சரித்திர நாயகர்களையும், பாரம்பரிய வாழ்க்கை முறைகளையும், நாட்டு நடப்பையும் அழகான பொம்மைகள் வடிவில் பார்க்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியே தனி. இப்படி காட்சிப் படுத்துவதன் மூலம்



சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் அதிக சிரமமில்லாமல் ஏற்படும் கேள்வியறிவு எவ்வளவு தூரம் நம்முடைய கலாசாரத்தை கட்டிக் காப்பாற்றியிருக்கிறது என்பதை எண்ணும் போது அவைகளின் முக்கியத்துவம் புரிகிறது. இன்னும் ஒரு படி மேல் போய் எப்படி இக்கலை நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும் போது இந்த பண்டிகைகளின் இன்றிமையாமையும் தெரிகிறது.

விளாச்சேரி என்னும் கிராமம் மதுரையிலிருந்து 20 கி.மீ. தூரத்திலுள்ளது. இங்கே யார் வேண்டுமானாலும் வந்து பொம்மை செய்யும் கைவினை நுட்பங்களைக் கற்றுக் கொள்ளலாம். பின்னர் அவரவர் வசதிக்கு தக்கப்படி இந்த தயாரித்தல் தொழிலில் ஈடுபடலாம். முதலில் கைதேர்ந்த வினைஞர் ஒரு களிமண் பொம்மையை உருவாக்குவார். அதற்கு சுமார் ஒருவார காலமாகும். அதை POP எனப்படும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்-சில் அச்சு எடுத்துக் கொள்வார்கள். அதன் பின், சற்று பயிற்சி உள்ள எவரும் 50 முதல் 70 பொம்மைகளை ஒரு நாளில் களிமண்ணை அச்சில் வார்த்து எடுக்கமுடியும். பின்னர் அவைகளை நிழலில் ஈரம் காயும் வரை உலர்த்தி சூளையில் சுடுவர். இப்படி சுட்டு வரும் பொம்மைகளுக்கு வர்ணம் பூசப்பட்டு மேருகேற்றப்படும். விளாச்சேரி மட்டுமன்றி, பண்ருட்டி கடலூர், காஞ்சிபுரம், அருகே உள்ள ஒரு சில கிராமங்களிலும் பொம்மை தயாரிப்பில் பல குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. வெளிநாட்டு ஏற்றுமதிக்கென எடை குறைந்த காகிதக்கூழ் பொம்மைகளையும் இவர்கள் தயாரிக்கின்றனர். மேலும் விவரங்களுக்கு https://cultureandheritage.org/2012/12/colourful-clay-dolls-of-panruti-in.html என்ற வலைப்பக்கத்தில் காணொளிகளுடன் கண்டறியலாம்.

## *வாழ்க்கை நெறி- தமிழ் கருவூலம் : பழமொழிக் கதை - பேராசை பெரு நஷ்டம்*

*(பழமொழிக் கதைகள் மூலம் சிறுவர்களுக்கு நல்ல கருத்துகளை எடுத்து செல்லும் ஒரு புது முயற்சி இது )*

சோமன் மாறன் இருவருமே விறகு வெட்டி பிழைப்பவர்கள். ஒரு நாள் சோமன் காட்டில் விறகு வெட்டும் போது கைத்தவறி அவனுடைய கோடாலி ஆற்றினுள் விழுந்து விட்டது. தன் வாழ்வாதாரமே போய் விட்டதென்று மிகவும் துக்கித்து அழுதான். அவன் மேல் பரிதாபம் கொண்ட ஆற்றின் தேவதை அவன் முன்னே வந்து அழுவதற்கான காரணம் கேட்டாள். அவன் தன்னுடைய கோடாலி ஆற்றில் விழுந்து போனதையும் அதனால் தன்னால் விறகு வெட்ட முடியாதென்பதையும் சொல்லி அழுதான், அந்த தேவதை நீரில் மூழ்கி ஒரு தங்கம் ஒரு வெள்ளி மற்றும் ஒரு இரும்புக்



கோடாலிகளை காட்டி இதில் எது உன்னுடையது என்று கேட்டாள். சோமன் எப்போதும் உண்மையானவன். ஆதலால் இரும்புக் கோடாலியே தன்னுடையது என்றும் மற்ற இரண்டும் தன்னுடையதல்லவென்றும் கூறினான். அதற்கு அந்த தேவதை மகிழ்ந்து அவன் உண்மையை பேசியதால் வெள்ளி தங்க கோடாலிகளையும் அவனுக்கே பரிசாக அளித்து விட்டு மறைந்து போனாள். சோமனும் வெகு சந்தோஷத்துடன் வீடு சென்றான்.

மறுநாள் சோமனின் கதையைக் கேட்ட மாறனும் அதே இடத்திற்கு சென்று தன்னுடைய கோடாலியை ஆற்றில் எறிந்து விட்டு சத்தமாக புலம்பத் தொடங்கினான். வெகு நேரமாகியும் தேவதை அவன் முன் வரவில்லை. அப்போது அவனுக்கு உண்மையிலேயே பயம் தோன்றி அழ ஆரம்பித்தான். அவனுடைய நோக்கம் பொய்யானது என்றறிந்திருந்த தேவதை அவனுக்கு பாடம் புகட்ட அவன் முன் தோன்றினாள். மாறனிடமும் அந்த தேவதை தங்கம் வெள்ளி இரும்பு கோடாலிகளை காட்டி அவனுடையது எது என்று கேட்டாள். மாறனுடைய பேராசை அவனுடைய கண்களில் தெரிந்தது. அவன் தங்கக் கோடாலியே தன்னுடையது என்று அதை வாங்கிக் கொள்ள பரபரத்தான்.

. தேவதைக்கு கோபம் வந்து "பொருளாசை பிடித்தவனே உனக்கு சொந்தமில்லாததையும் சொந்தம் கொண்டாட பொய் சொல்லவும் தயங்குவதில்லை. பேராசையால் நீயே உன்னுடைய கோடாலியை நீரில் எறிந்ததால் அதுவும் எனக்கே சொந்தம்" என்று சொல்லி மறைந்து போனாள். இதை எதிர்பார்க்காத மாறனும் பெரும் வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

இந்த கதைக்கு இன்னொரு பழமொழியும் சொல்லலாம் :**"பொய் சொல்லும் வாய்க்கு போஜனம் கிடைக்காது"**

*Visit : https://verumthalirum.blogspot.com ( for earlier issues ) Feed back : verumthalirum@gmail.com*